முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1248

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.02.2023,** செவ்வாய்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
   ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
   தானபலம் கொண்ட குருராஜனே
   தர்மனே தரணிகாக்க வந்த எந்தன் அவதாரனே
2. அவதார ஞானியே அரங்கனே
   அகிலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அவதார உன்னோக்கம் வெற்றிகொள்ள
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசிதன்னை
   (சுபகிருது வருடம் மாசி மாதம் **16** ம் நாள் **28.02.2023,** செவ்வாய்கிழமை)
3. ஆசியதும் அரங்கன் கரம்பட
   அகிலத்தில் தீட்சைபெற்ற மக்களெல்லாம்
   வாசிவென்று உலகை மாற்றும்
   வல்லமைமிக்க சக்திகளாக மாறுவரப்பா
4. அப்பனே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   அவதாரத்தின் நோக்கமாக இந்த பேருலகம்
   வரம்பெற்று அரங்கனால் உயரக்கூடும்
   வாழுகின்ற மக்களெல்லாம் ஞானிகளாகி
5. ஆகியே அரங்கன் கரம்பட
   அவரவரும் பிறவிப்பிணி அகற்றி
   வரமென இந்த கலியுகத்தில் ஞானிகளாக வலம்வந்து
   அரங்கன் அவதார நோக்கத்தை பூர்த்திசெய்வர்
6. பூர்த்திசெய்கின்ற புண்ணியபலத்தையும்
   நேர்த்தியாக ஞானபலத்தையும் நிலவுலகில்
   அன்பர்களுக்கு இரு கண்களாகவே
   ஆகவே அரங்கன் நயன தீட்சை அருளி அன்பர்களை காத்துவர
7. வகைபட அரங்கனை கண்ட மக்களுக்கு
   வையகத்தில் இனி பிறவி இல்லை
   மிகைபட அரங்கன் தர்மத்தை ஏற்று மண்ணுலகமெல்லாம் செய்த மக்களுக்கு
   மகான்களாகும் பெருவாய்ப்பு உண்டாகி இனிதே
8. இனிதே அவர்கள் வழியே இந்த பேருலகம்
   இணையில்லாத ஆறுமுகன் தலைமைகொண்ட
   கனிவுமிக்க ஞான ஆட்சி கண்டு பாதுகாப்புப் பெறக்கூடும்
   கண்டுரைத்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–